# அல்லிக்கேணியும் அருளிச்செயலும்

ஆழ்வார்கள் அருளிச்செய்த அந்தமிழ்ப் பாசுரங்கள் திவ்வியப்பிரபந்தம் என்றும், அருளிச்செயல் என்றும் வழங்கப் பெறுகின்றன. அப்பாசுரங்களை எம்பெருமான் திருமுன்பே கோஷ்டியாக ஓதுவது என்பது வைணவத் திருக்கோயில்களுக்கு மட்டுமே உரிய தனிச் சிறப்பாகும். அப்படி ஓதுகின்ற கோஷ்டி மிக மிகச் சிறந்து விளங்குவது திருவல்லிக்கேணிக்கே உரிய தனிச்சிறப்பாகும். திருவல்லிக்கேணியில் நடைபெறும் அனைத்து உற்சவங்களிலும், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கோஷ்டியாக பெருமாள் திருமுன்பே திவ்வியப்பிரபந்த சேவாகாலம் செய்வது கண்கொள்ளாக் காட்சியாகும். அதிலும், எந்தப் பயனையும் எதிர்பாராமல் தன்னார்வத் தொண்டாகவே அனைவரும் இப்பணியைச் செய்வது மிக மிகச் சிறப்பானதாகும். அருளிச்செயலில் ஸ்ரீபார்த்தஸாரதி எம்பெருமானுக்குள்ள ஈடுபாட்டினால் அவனே தன்னுடைய கோஷ்டியை இவ்வளவு சிறப்பாக அமைத்துக் கொண்டான் போலும்! அதுமட்டும் அல்ல. திருவல்லிக்கேணி யில் நடைபெறும் ஒவ்வொரு உற்சவமும் அருளிச் செயலை முக்கியமாகக் கொண்டே ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருவல்லிக்கேணி யில் ஒவ்வொரு வருடமும் ஸ்ரீபார்த்தஸாரதிப் பெருமாளுக்கும், தெள்ளியசிங்கப் பெருமாளுக்கும் பிரம்மோத்ஸவங்கள் நடைபெறுகின்றன. காலை மாலை இரண்டு வேளையும் பெருமாள் மிகப் பெரிய வாகனங்களில் திருவீதிப்புறப்பாடுகள் கண்டருளுவார். புறப்பாட்டின்போது எம்பெருமானுக்கு முன்னே அருளிச்செயலை ஓதிக்கொண்டு மிகப்பெரிய கோஷ்டி செல்லும். இரண்டு வேளைகளிலும் சற்றேறக்குறைய நூறு பாசுரங்கள் வீதம் சேவிக்கப்படும். ஒவ்வொரு வேளையும் எம்பெருமான் எழுந்தருளும் வாகனங்கள், அன்று சேவிக்கப்படும் அருளிச்செயல் பாசுரங்களுக்கு ஏற்ற வகையிலேயே அமைந்துள்ளது மிக மிக ஆச்சர்யமான விஷயமாகும். இதைச் சற்று விரிவாகப் பார்ப்போம்:

பிரம்மோற்சவத்தில் முதல் நாள் காலை பொய்கையாழ்வார் அருளிச்செய்த முதல் திருவந்தாதி ஸேவிக்கப்படும். 'வையந்தகளியா வார்கடலே நெய்யாக வெய்யகதிரோன் விளக்காகச் செய்ய சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை இடராழி நீங்குகவே என்று' என்ற முதல் பாசுரத்தில் உபய விபூதிக்கும் (பரமபதத்திற்கும் பூவுலகிற்கும்) எம்பெருமான் நாதன் என்று அருளிச் செய்துள்ளார் ஆழ்வார். அதற்கேற்ப முதல் நாள் காலை பெருமாள் உபயவிபூதிக்கும் நாதனாக தர்மாதி பீடத்தில் எழுந்தருளுகிறார்.

முதல் நாள் மாலை பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு தொடங்கப் பெற்று, தொடர்ந்து பெரியாழ்வார் திருமொழிப் பாசுரங்கள் சேவிக்கப்பெறுகின்றன. அப்பாசுரங்களில் பெரியாழ்வார் தம்மை யசோதையாக பாவித்துக் கொண்டு, கண்ணனை அனுபவிக்கிறார். "மெச்சூது சங்கமிடத்தான் நல் வேயூதி, பொய்ச்சூதில் தோற்ற பொறை உடைய மன்னர்க்காய் பத்தூர் பெறாதன்று பாரதம் கைசெய்த அத்தூதன்" (2–1–1) என்று, பாரதப்போரில் பண்டவர்களுக்குத் துணை நின்ற கண்ணபிரான் நல் வேய் ஊதியதாக அருளிச்செய்துள்ளார். அதற்கேற்பப் பெருமாள் புன்னைமர வாகனத்தில் புல்லாங்குழல் ஊதும் கண்ணனாகத் திருக்கோலம்பூண்டு எழுந்தருளுகிறார்.

இரண்டாம் நாள் காலை பூதத்தாழ்வார் அருளிச்செய்த இரண்டாம் திருவந்தாதி சேவிக்கப்படுகிறது. அதில் ஒரு பாசுரத்தில் ஒரு அரிய செய்தி தெரிவிக்கப்படுகிறது.

எம்பெருமான் திருவுலகளந்தருளினபோது, எம்பெருமானுக்கு என்ன ஆபத்து வருமோ என்று அஞ்சி, விரோதிகள்மீது ஆதிசேஷன் விஷத்தைக் கக்கியதாக ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். ‘‘விடங்காலும் தீவாய் அரவணைமேல் தோன்றல்’’ (71) என்றும் ‘பொங்குபடமூக்கில் ஆயிரவாய் பாம்பணைமேல் சேர்ந்தாய்’’ (97) என்றும் ஆழ்வார் அருளிச்செய்ததற்கேற்ப சேஷவாகனத்தில் எம்பெருமான் எழுந்தருளுகிறான். அதிலும், இத்திருவந்தாதியில் ‘‘பகல் கண்டேன் நாரணனைக் கண்டேன், கனவில் மிகக் கண்டேன் மீண்டு அவைனை மெய்யே மிகக் கண்டேன் ஊன்திகழும் சோதி ஒளிதிகழும் சேவடியான் வான்திகழும் சோதி வடிவு’’ (81) என்று ஆழ்வார் தாம் பரமபதநாதனைக் கண்டதாக அருளிச்செய்துள்ளதற்கேற்ப, பரமபதநாதன் திருக்கோலத்திலேயே பெருமாள் எழுந்தருள்வது குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாம் நாள் மாலை பெரியாழ்வார் திருமொழிப் பாசுரங்கள் தொடர்ந்து சேவிக்கப் பெறுகின்றன. ‘‘பற்றார் நடுங்க முன் பாஞ்சசன்னியத்தை வாய் வைத்த போறேறே, என் சிற்றாயர் சிங்கமே’’ (3–3–5) என்று பாரதப்போரில் பாஞ்சசன்னியத்தை ஊதிய கண்ணனை ஆயர் சிங்கமாக ஆழ்வார் அனுபவித்ததற்கு ஏற்ப பெருமாள் சிம்மவாகனத்தில் எழுந்தருளுகிறார்.

மூன்றாம் நாள் காலை பேயழ்வார் அருளிச் செய்த மூன்றாம் திருவந்தாதி சேவிக்கப் படுகிறது. அதில் ‘‘பொலிந்த கருடன்மேல் கொண்ட கரியான் கழலே தெருள் தன்மேல் கண்டாய் தெளி’’ (57) என்று அருளியதற்கேற்ப கருடவாஹனத்தில் பெருமாள் எழுந்தருள்கிறார். ‘‘திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும் அருக்கன் அணிநிறமும் கண்டேன் செருக் கிளரும் பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக் கண்டேன் என்னாழி வண்ணன்பால் இன்று’’(1) என்று ஆழ்வார் அருளிச்செய்த ஸேவையை அன்றையதினம் நடைபெறும் ஏகாந்தஸேவையில் கண்டு களிக்கலாம்.

மூன்றாம் நாள்மாலை பெரியாழ்வார் திருமொழிப் பாசுரங்கள் தொடர்ந்து சேவிக்கப் பெறுகின்றன. ‘‘உரகமெல்லணையான் கையில் உறை சங்கம்போல் மடவன்னங்கள்’’ (4–4–4) திருக்கோட்டியூரில் உள்ளதாகப் பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளார். அதை ஒப்பிட்டுப் பார்ப்பதுபோல் ஹம்ஸவாகனத்தில் பெருமாள் எழுந்தருள்கிறார். மேலும் ஒருகால் உலகத்தில் பிரளயம் ஏற்பட்டு வேதங்கள் மறைந்திட அபோது எம்பெருமான் ஹம்ஸமாக உருவு கொண்டு பிரமனுக்கு வேதங்களை உரைத்தான் என்று புராணம் பகருகிறது. இதைப் பெரியாழ்வாரும் ‘‘துன்னிய பேரிருள் சூழ்ந்து உலகை மூட மன்னி நான்மறை முற்றும் மறைந்திட, பின்னிவ் வுலகினில் பேரிருள் நீங்க அன்று அன்னமதானானே’’ (1–8–10) என்று அருளிச் செய்துள்ளார். (அப்பாசுரம் முதல்நாளே சேவிக்கப்பட்டுவிடுகிறது.) அப்படிப் பட்ட பிரமகுருவான எம்பெருமான் தானே வந்து தனக்கு அருள்புரிந்தான் என்பதைக் கூறும் ஆழ்வார் ‘‘பீதவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து போதிற்கமல வன்னெஞ்சம் புகுந்தும் என் சென்னித்திடரில் பாத இலச்சினை வைத்தான்’’ (5–2–8) என்று அருளிச்செய்துள்ளார். அதற்கேற்பவும் பெருமாள் ஹம்ஸவாகனத்தில் ‘பறவை ஏறு பரம்புருடனாக’ (5–4–2) ஸேவை ஸாதிக்கிறார்.

நான்காம் நாள் காலை திருமழிசைப் பிரான் அருளிச்செய்த நான்முகன் திருவந்தாதி சேவிக்கப்படுகிறது. தொடங்கும்போதே ‘‘நான்முகனை நாராயணன் படைத்தான்’’ என்று எம்பெருமானுடைய பரத்வத்தை அருளிச் செய்கிறார் ஆழ்வார். ‘‘நீயே எரிசுடரும்’’ (20) என்றதற்கேற்பப் பெருமாள் பரத்வம் பொலிய ஸூர்யமண்டல மத்யவர்த்தியாக, சூரியப்பிரபையில் எழுந்தருள்கிறார்.

நான்காம் நாள் மாலை (பெரும்பாலும்) ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை, நாச்சியார் திருமொழிப் பாசுரங்கள் சேவிக்கப்பெறும். எம்பெருமானைக் ‘கதிர் மதியம்போல் முகத்தான்’ என்று ஆண்டாள்

வர்ணித்ததற்கு ஏற்பக் காலையில் சூரியப் பிரபபையில் எழுந்தருளிய எம்பெருமான் மாலையில் சந்திரப்பிரபையில் எழுந்தருள்வது மிக மிகப் பொருத்தமே! "சந்திர மண்டலம் போல் தாமோதரன் கையில்" (7–4) பாஞ்சசன்னியம் விளங்குவதாக ஆண்டாள் அருளிச்செய்கிறாள். அதையும் ஒப்பிட்டுப் பார்ப்பதுபோல் பெருமாள் சந்திரப்பிரபையில் எழுந்தருள்கிறார் போலும்!

ஐந்தாம் நாள் காலை நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம் சேவிக்கப் பெறுகிறது. ஆழ்வார் தாமான தன்மையை விட்டு நாயகி பாவனையியே முழுவதும் அருளிச்செய்துள்ள திவ்வியப்பிரபந்தம் திருவிருத்தமாகும். அதற்குச் சேர எம்பெருமானே நாச்சியார் திருக்கோலம் பூண்டு எழுந்தருள்வது மிக மிகப் பொருத்தமானது.

ஐந்தாம் நாள் மாலை நாச்சியார் திருமொழி முடித்து, குலசேகர ஆழ்வார் அருளிச்செய்த பெருமாள் திருமொழி ஸேவிக்கப்பெறும். குலசேகர ஆழ்வார் மிக மிக ஈடுபட்டது ராமாவதாரத்திலே ஆகையால், பெருமாள் சிறிய திருவடி (அனுமன்) வாகனத்தில் எழுந்தருளுகிறார். "திறல்விளங்கு மாருதியோடு அமர்ந்தான் தன்னை" (10–11) என்ற பெருமாள் திருமொழிப் பாசுரமும் ஸேவிக்கப்படுமானால் அதைவிடப் பொருத்தம் வேறில்லை.

ஆறாம் நாள் காலை திருமழிசை ஆழ்வார் அருளிச்செய்த திருச்சந்தவிருத்தம் ஸேவிக்கப் பெறுகிறது. "ஆதியான வானவர்க்கும் ஆதியான ஆதி நீ" (8) என்று எம்பெருமானுடைய மேன்மையே இந்த திவ்வியப்பிரபந்தம் முழுவதும் தெரிவிக்கப்படுகிறது. அதற்குச் சேர பெருமாளும் நீண்ட திருவபிஷேகம் அணிந்து பரத்வம் பொலிய ஆனந்த விமானத்தில் எழுந்தருளுகிறார்.

ஆறாம் நாள் மாலை நம்மாழ்வார் அருளிச்செய்த பெரியதிருவந்தாதிப் பாசுரம் ஸேவித்து முடித்து திருமாலை, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு முதலிய திவ்வியப்பிரபந்தங்கள் சேவிக்கப் பெறும். "உம்பரால் அறியலாகா ஒளியுளார் ஆனைக்காகிச் செம்புலால் உண்டு வாழும் முதலைமேல் சீறிவந்தார்" (28) என்றும், "விண்ணுளார் வியப்ப வந்து ஆனைக்கன்று அருளை ஈந்த கண்ணறா" (44) என்றும் கஜேந்திரனுக்கு அருள் செய்தமை பற்றித் திருமாலையில் அருளிச்செய்யப்பட்டுள்ள பாசுரங்களுக்கேற்ப பெருமாள் யானை வாகனத்தில் எழுந்தருள்கிறார்.

ஏழாம் நாள் காலை முதன் முதலில் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திருவெழுகூற்றிருக்கை தொடங்கப் பெற்றுப் பிறகு பெரிய திருமொழி ஸேவிக்கப் பெறுகிறது. திருமங்கையாழ்வார் சித்திரகவியில் தேர்வடிவில் (ரதபந்தமாக) அருளிச்செய்தது திருவெழுகூற்றிருக்கை ஆகும். அதற்குச் சேர பெருமாள் திருத்தேரில் எழுந்தருள்வதன் பொருத்தம் தான் என்னே! மேலும் "பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு பார்த்தன்தன் தேர் முன் நின்றானை" (2–3–1) என்றும், "பார்த்தன்தன் செல்வத் தேரேறு சாரதி" (2–10–8) என்றுமுள்ள பெரியதிருமொழிப் பாசுரங்களுக்குச் சேரவும் பெருமாள் திருத்தேரில் எழுந்தருள்வது மிக மிகப் பொருத்தமே!

எட்டாம் நாள் காலை முதலில் சிறியதிருமடல் தொடங்கி, தொடர்ந்து பெரிய திருமொழிப் பாசுரங்கள் சேவிக்கப் பெறுகின்றன. "தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி ஆராத வெண்ணெய் விழுங்கி" என்று சிறிய திருமடலிலும் 'பண்டிவன் வெண்ணெய் உண்டான் என்று ஆய்ச்சியர் கூடியிழிப்ப', (3–3–3) 'ஆய்ச்சியர்கள் வைத்த தயிர்வெண்ணெய் உளங்குளிர அமுது செய்து'(3–9–7), 'படலடைத்த சிறுகுரம்பை நுழைந்துபுக்குப் பசுவெண்ணெய் பதமார. . . ." (4–4–3), என்று பெரிய திருமொழியிலும் அருளிச்செய்துள்ள பாசுரங்களுக்குச் சேர பெருமாள் வெண்ணெய்த் தாழிக் கண்ணன் திருக்கோலத்தில் பல்லக்கில் எழுந்தருள்கிறார்.

எட்டாம் நாள் மாலை பெரியதிருமொழிப் பாசுரங்களே தொடர்ந்து ஸேவிக்கப்பெறும். ஆடல்மாவலவன் கலிகன்றி பாசுரங்களை

சேவிக்கும்போது பெருமாளும் ஆடல்மாவான குதிரை வாஹனத்தில் எழுந்தருளுகிறார். மேலும் திருமங்கையாழ்வார் பெருமாளுடைய திருவாபரணங்களைக் கொள்ளையடிக்க எழுந்தருள்வதும், அவருக்குத் திருமந்திர உபதேசம் செய்து திருத்திப் பணிகொள்வதும், தொடர்ந்து 'வாடினேன் வாடி வருந்தினேன்' என்ற திருமொழி முதல் பதிகத்தை அனுஸந்திப்பதும் அன்றையதினத்தின் முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

திவ்வியப்பிரபந்தங்களில் ஆழ்வார்களுடைய அனுபவ ப்ரகாரங்களில் நாச்சிமார்கள் ஊடல் கொண்டு எம்பெருமானை வெறுத்து, கதவைச் சாத்தித் தள்ளுதல் என்று ஒரு அனுபவம் உண்டு. நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய மூவரும் ஊடல் பதிகங்கள் அருளிச்செய்துள்ளனர். ''மற்பொரு தோளுடை வாசுதேவா வல்வினையேன் துயில் கொண்டவாறே, இற்றை இரவிடை ஏமத்தென்னை இன்னணை மேலிட்டு அகன்று நீபோய் அற்றை இரவும் ஓர் பிற்றை நாளும் அரிவையரோடும் அணைந்து வந்தாய், எற்றுக்கு நீ என் மருங்கில் வந்தாய் எம்பெருமான் நீ எழுந்தருளே' (6–6) என்று குலசேகராழ்வார் அருளிச்செய்த பாசுரத்திற்போலவே, முந்தின (8ம்) நாள் இரவு நாச்சிமாருடன் சேர்த்தி சேவையில் எழுந்தருளிய பெருமாள், (வேடுபறியின்போது தான் தொலைத்துவிட்ட மோதிரத்தை தேடிக்கொண்டு) ஒன்பதாம் நாள் காலை தனியாக எழுந்தருள்வதும், மோதிரத்தைத் தேடுவதும், பிறகு கோயிலுக்குத் திரும்பும்போது நாச்சிமார்கள் பெருமாளை கோயிலுக்குள் விடாமல் கதவைச் சாத்தி மட்டையடி செய்வதும் இப்படி அனைத்தும் ஆழ்வார்கள் அருளிச்செயலை ஒட்டியே அமைந்துள்ளன. முடிவில் நம்மாழ்வார் எழுந்தருள, நாச்சிமார்கள் 'நம்மாழ்வாருக்காக உம்மைப் பொறுத்தோம்' என்று எம்பெருமானை நோக்கிக் கூறுவதும், நம்மாழ்வார் அருளிச்செய்த 'மின்னிடை மடவார்' (7–2) என்று தொடங்கும் ஊடல் பதிகம் அப்போது சேவிக்கப் பெறுவதும், இவ்வுத்ஸவத்தில் ஆழ்வாருடைய அருளிச்செயல்களுக்குள்ள முக்கியத்துவத்தை நன்கு வெளிப்படுத்துகிறது. (அன்றிரவு திருமங்கையாழ்வார் அருளிச்செய்த 'காதில் கடிப்பிட்டு' (10–8) என்று தொடங்கும் ஊடல் பதிகம் சேவிக்கப்படுகிறது.)

ஒன்பதாம் நாள் இரவு திருமொழிப் பாசுரங்கள் தொடர்ந்து சேவிக்கப்படுகின்றன. உத்ஸவத்தின் பூர்த்தியை முன்னிட்டும், பெரியதிருமொழியின் பூர்த்தியை முன்னிட்டும் பெருமாள் தங்க சப்பரத்தில் எழுந்தருள்கிறார். உத்ஸவத்தின் முடிவான அம்சமாகக் கொடி இறங்கியவுடன் திருமொழி சாற்றுமறை நடைபெறுகிறது.

பத்தாம் நாள் பெருமாளுக்கு த்வாதச ஆராதனம் (12 திருவாராதனங்கள்) நடைபெறும்போது பூர்த்தியாக திருவாய்மொழி ஆயிரத்தையும் பெருமாள் திருச்செவி சாத்தியருள்கிறார். அன்றிரவு குளிர்ச்சியாக வெட்டிவேர் திருத்தேரில் புறப்பாடு எழுந்தருள, பெருமாளுடைய திருவுள்ளத்தையும் குளிர்விக்கும் வகையில் அவன் திருவுள்ளத்துக்கு மிகவுகந்த அடியவரான எம்பெருமானாரைப் பற்றியதான இராமானுச நூற்றந்தாதி சேவிக்கப்படுகிறது.

இப்படி வாகன சேவைகளுக்கு ஏற்ப, பாசுரங்களை சேவிக்கும்படி அமைத்துக் கொண்டார்களோ என்ற ஐயம் எழலாம். ஆனால் அப்படி அன்றிக்கே, காலை வேளைகளில் இயற்பாவும், மாலை வேளைகளில் முதலாயிரமும், பெரிய திருமொழியும் தொடர்ந்து சேவிக்கப்படுவதால், பாசுரங்களுக்கு ஏற்ற வகையிலே வாகனப்புறப்பாடுகள் அமைந்துள்ளன என்பது புலப்படும்.

ஆக, அல்லிக்கேணிக்காக அருளிச் செயல்கள் ஏற்பட்டனவோ அல்லது, அருளிச் செயல்களுக்காக அல்லிக்கேணி ஏற்பட்டதோ என்று நினைக்கும்படியாக திருவல்லிக்கேணி யில் நடைபெறும் உற்சவங்கள் அனைத்தும் ஆழ்வார்கள் அருளிச்செயல்களை அடியொற்றியே அமைந்துள்ளன.